1978 மார்ச் 28]

திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*697 வினு— திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு சப்ளை செய்யும் விவசாயி களுக்கு சர்க்கரை ஆலை ஆண்டு அறிக்கையில் அறிவித்ததைப் போல் டன் ஒன்றுக்கு ரூ. 134.50 கொடுக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிருந்து கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. ப. சுந்தரம் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டு அறிக்கைப் புத்தகத்திலே 134 ரூபாய் 50 காசு என்று சொல்லி, அட்வான்ஸ் பில்லில் 119 ரூபாய் 50 காசு என்றும், பின்னுல் 127 ரூபாய் என்றும் கூறப்படுகிறது. இந்த ஆண்டு அறிக்கை என்னிடம் இருக்கிறது. தேவையானுல் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று, அதை நான் வழங்கத் தயாராக இருக்கிறேன். எனவே, இது சம்பந்தமான குறைகளைப் போக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் 134 ரூபாய் 50 காசு கொடுப் போம் என்று ஆலை அறிவித்திருந்தது உண்மை. ஆனுல், அதை எந்த அடிப்படையில் ஆலை அறிவித்தது என்றுல் ஆலைக்கு அதிக மான கரும்பை உற்பத்தியாளர்கள் தருவார்கள், மத்திய அரசு அறிவித்துள்ள ஊக்கத் திட்டங்கள் மூலமாக அதிக லாபம் அடைய முடியும் என்ற எண்ணங்களால் 134 ரூபாய் 50 காசு கொடுப் போம் என்று சொல்லப்பட்டது. ஆனுல், ஆலை பொதுக் குழு வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றிக் கூறிய காரணங்களை ஏற்றுக் கொண்ட பிறகு, ஆலையிடம் போதுமான பண வசதி இல்லை. எக்ஸைஸ் குறைந்து விட்ட பிறகு தள்ளுபடி குறைந்து விட்டதும் காரணம். அதனுல்தான் ரூ. 134.50 என்பதை ரூ. 127.50 என்று விலை நிர்ணயிக்கப்பட்டது. அதிலே 120 ரூபாய் முதலிலும் ரூ. 7.50 'நான்-ரிபண்டபள் டெபாசிட்' என்ற வகையிலும் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 28

திரு. மு. அம்பிகாபதி : கரும்பு இனிக்கின்ற விஷயம் ஆகும். இதில் முக்கியமாக தமிழகத்தில் கடந்த ஆண்டு உற்பத்தியான கரும்பில் 29 சதம் தான் ஆலைகளுக்கு வந்திருக்கிறது. கரும்பு விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. சரிவர ஆலைகளுக்கும் கரும்பு கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விதிருப்பத்தூர் ஆலையைப் பற்றிய கேள்வி. சுருக்கமாக மூலக் கேள்வியை ஒட்டி கேள்வி கேளுங்கள். இன்னும் மூன்று டிமாண்டுகள் இருக்கின்றன. மாலையிலும் அவை இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : திருப்பத்தூர் கூட்டுறவு ஆலையானாலும் மற்ற ஆலைகளானாலும் பொருந்தும். எந்த ஆலையாக இருந்தாலும் இந்த நிலை இருக்கிறது. எனவே, கரும்பு விவசாயிகளுக்கு அதிகமான முறையில் விலை கொடுக்கவும், ஊக்க போனஸ் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு அதிகமான விலை கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க அதிகமான விலை கொடுக்கப்படவில்லை. ஆனாலும் மாநில அரசு டன் ஒன்றுக்கு 125 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இது வரை அதற்கான உத்தரவு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. தி. அன்பழகன் : தற்போது கொடுக்கப்படுகிற ரூபாய் 127.50 காசை மேலும் உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தற்போது அந்த உத்தேசம் இல்லை. காரணம் கட்டுப்பாடற்ற மார்க்கெட்டிலே சர்க்கரை விலை குறைந்திருக்கிறது. உலக, மற்றும் வெளி மார்க்கட்டுகளிலும் விலை குறைந்துள்ளது என்ற காரணத்தால், இப்போது இருக்கின்ற நிலைமையில் ரூபாய் 127.50 காசுக்கு மேல் கொடுக்க முடியாத சூழ்நிலை சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: வட மாநிலங்களில் கரும்பு டன் ஒன்றுக்கு 150 ரூபாய் அளவுக்குக் கொடுக்கப்படுகிற நிலை இருக்கும்போது நமது மாநிலத்தில் பல ஆண்டு காலமாக முயற்சி செய்தும் 125 ரூபாய்கூடக் கிடைக்க முடியாத துர்பாக்கியமான நிலை இருக்கிறது. இது விவசாயிகளுக்குப் பெருத்த கஷ்டத்தைத்

தருகிறது. அலங்காநல்லூர் ஆலையில் 125 ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியும் 116 ரூபாய்தான் கொடுத்திருக்கிருர்கள். அதற்குரிய காரணத்தை அரசு ஆராய்ந்து உரிய விலையை நிர்ணயிக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் வட மாநிலங்களில் கரும்புக்கு அதிக விலை கொடுக்கிருர்கள், தென் மாநிலங்களைப் பொறுத்த அளவில் குறைந்த விலைதான் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கருத்தைப் பொறுத்த அளவில் கடந்த ஜனவரி 10, 11 தேதிகளில் நானும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், முதல்வர்கள் மாநாட்டில் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் சொல்லிய கருத்து தென் மாநிலங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் கரும்பை அதிகமாக உற்பத்தி செய்கிருர்கள். அந்த அளவுக்குக் வட மாநிலங்களில் அதிகமாக இல்லை என்று எடுத்துச் சொன்னுர்கள். கரும்பை அதிகமாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு குறைந்த விலையும், குறைவாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிக விலையும் என்ற நிலை இருப்பது சரியல்ல என்று நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

ஆகவே இப்போது மார்ச் 1ஆம் தேதியிலிருந்து சர்க்கரையினுடைய விலையைக் கூட 15 பைசா அதிகமாகக் கூட்டியிருக்கிருர்கள். ஆகவே, வருகின்ற நாட்களில் சர்க்கரையினுடைய விலையை அதிகமாக்கினுல் கரும்புக்கு கொடுக்கப்படவேண்டிய விலையைச் சேர்த்து கொடுக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். அலங்காநல்லூர் ஆலையைப்பற்றிச் சொன்னுர்கள். அதைப்பற்றித் தனியாகச் சொன்னுல் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைச் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்னைகள்.

(அ). விசாரணைக் கமிஷன் முன்னுள்ள பொருள்பற்றி முதல்வர் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், சோமசுந்தரம் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது பற்றி அங்கே

TRUTH ALONE TRIUMPHS